

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அண்ணல் அம்பேத்கர் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப்போட்டிகள் மற்றும் தமிழ்நாடு நாள் விழாவினையொட்டி நடைபெற்ற கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பரித்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் இளங்கோ உள்பட பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி கோட்டைக்கு வருகை தந்த வேர்களைத் தேடித் திட்டத்தின் மூலம் புலம்பெயர் தமிழர்களின் வாரிசுகள் தமிழர்களின் பண்பாட்டை அறிந்து கொள்ளும் வகையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் உற்சாகத்துடன் பங்கேற்று பொங்கல் விழாவை கொண்டாடினர். உடன் ஆரணி எம்.பி. தரணிவேந்தன், அயலகத் துறை ஆணையர் கிருஷ்ணமூர்த்தி, சப் கலெக்டர் திவ்யான்ஷு நிகம், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் உள்ளனர்.

### மனோதத்துவ நிபுணர்களைக் கொண்டு

# அரசுப் பள்ளி மாணவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஆக. 15-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அரசு ஹோபார்ட் முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, தாயார் சாகிப் தெரு அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி மற்றும் சைதாப்பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி ஆகிய 3 பள்ளிகளில் VIRTUSAA நிறுவனத்தின் சமூக பங்களிப்பு நிதி ரூபாய் 1.70 கோடி மதிப்பில் கட்டப்பட்ட 5 கணினி ஆய்வகங்களைத் திறந்து வைத்தார்.



இவ்விழாவில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரையாற்றியதாவது:-

நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அரசு ஹோபார்ட் முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, தாயர் சாகிப் தெரு அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி மற்றும் சைதாப்பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி ஆகிய 3 பள்ளிகளில் VIRTUSAA நிறுவனத்தின் சமூக பங்களிப்பு நிதி ரூபாய் 1.70 கோடி மதிப்பில் 5 கணினி ஆய்வகங்களைத் திறந்து வைத்ததில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கணினி ஆய்வகங்களை நிறுவுவதற்காகத் தம் பங்களிப்பை நல்கிய இந்நிறுவனத்திற்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மனோதத்துவ நிபுணர்களைக் கொண்டு புத்தாக்கப் பயிற்சி முதல் முறையாகத் தொடங்கப்பட்டுள்ளது

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது பங்களிப்பாக சொந்த நிதி ரூபாய் 5 லட்சத்தை வழங்கி நம்ம ஊரு நம்பள்ளி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக சமூகத்திற்கு நம்மால் முடிந்த பங்களிப்பை அளிக்கும் வகையில் பல்வேறு நபர்கள் அளித்த நிதி தற்போது ரூபாய் 380 கோடி சேர்ந்துள்ளது. நேர்மையான வகையில் இந்த நிதி செலவிடப்படும். நல்ல திட்டங்களுக்கு இத்தொகை செலவிடப்படும். கல்வி என்பது சமத்துவத்தை மலரச் செய்யும் ஆயுதம் என சொன்னவர் கலைஞர் அவர்கள். தற்போது கல்விக்குச் செய்யும் முதலீடு எதிர்காலத்தில் மாணவர்களிடமிருந்து நல்ல வட்டியை தரும்.

பள்ளிகளில் பயின்ற முன்னாள் மாணவர்கள் தனது பங்களிப்பை நிதியாகவும் உழைப்பாகவும் வழங்க 7.5 லட்சம் நபர்கள் விழுதுகள் திட்டத்தில் பதிவு செய்துள்ளார்கள். மாணவர்கள் நன்றாகப் படித்து, எதிர்காலத்தில் அவர்களது வாழ்க்கை நல்வாழ்க்கையாக அமைய வேண்டுமென விரும்பும் சமூகம் ஆசிரியர் சமூகம். எனவே, மாணவச் செல்வங்கள் நன்றாகப் படித்து படிக்கும் பள்ளிக்கும், பெற்றோர்க்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனப் பேசினார்.

இவ்விழாவில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகளின் உறுப்பினர் செயலர் இரா. சுதன், (ப.நி), பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், VIRTUSAA நிறுவனத்தின் தலைமை தொழில் நுட்ப அதிகாரி ராம் மீனாட்சி சுந்தரம், தொழில் நுட்ப சேவை வரியின் தலைவர் வெங்கடேசன் விஜயராகவன், நிர்வாகத் துணைத் தலைவர் என். எம். வைத்யநாதன், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சா. மார்ஸ், மாவட்டக் கல்வி அலுவலர் திருமதி இரா.சி. சரஸ்வதி, ஆசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறையில் 6 புதிய பேருந்துகள்!

# அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஆக.15-

மயிலாடுதுறை பேருந்து நிலையத்தில் இருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 3 புதிய பேருந்துகள், 3 புதிய கூண்டு கட்டப்பட்ட பேருந்துகள் சேவை தொடக்க விழா மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பும்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சட்ட மன்ற உறுப்பினர்கள் சீர்காழி எம்.பன்னீர் செல்வம், மயிலாடுதுறை எஸ்., ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலை வர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 3 புதிய பேருந்துகள், 3 புதிய கூண்டு கட்டப்பட்ட பேருந்துகள் சேவையை சுற்றுச் சூழல் மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கொடி அசைத்து தொடங்கி வைத்து பேசுகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம், நாகை மண்லத்தில் உள்ள 11 பணிமனைகள் மூலம் 541 பேருந்துகளை இயக்கி மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்ட பொதுமக்களக்கு சேவை செய்து வருகிறது. மயிலாடுதறை, சீர்காழி மற்றம் பொறையார் ஆகிய நான்கு பணிமனைகளை உள்ளடக்கிய மயிலாடுதுறை மாவட்டத்தில் நாளொன்றுக்கு 72 புறநகர் பேருந்துகள், 65 நகர பேருந்துகள் மலம் 55,796 கி.மீ. இயக்கப்பட்டுவதில் 1,18,341 பயணிகள் பயனடைந்து வருகின்றனர். இதில் 57,152 மகளிர் பயணிகளும், 174 மாற்றுத்திறனாளி பயணிகளம், 3 மாற்றுத்திறனாளி உதவியாளர் பயணிகளும், 15 திருநங்கை பயணிகளம் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் கட்டணமின்றி பயணித்து வருகின்றனர். மயிலாடுதுறை மாவட்டத்திற்குட்பட்ட மூன்று பணிமனைகளுக்கும் புதிய மற்றும் கூண்டு புணரமைக்கப்பட்ட 21 பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 15 பேருந்துகள் வழங்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. மயிலாடுதுறை மாவட்டத்திற்கு 6 புதிய பேருந்துகளின் சேவைகள் பொதுமக்கள் போரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் விரைவில் புதிய வழித்தடங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேருந்துகளை தொடங்கி வைக்க உள்ளார்கள். தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்களை பெறுகின்ற பொது மக்கள் அரசுக்கு நல் ஆதரவு வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், பொதுக் குழு உறுப்பினர் பி.சிவதாஸ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஞான.இமையநாதன், பஞ்சுகுமார், எம். அப்துல்மாலிக், ஏ.ஆர். ராஜா, மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், ப.முருகமணி, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரராஜசேகர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே. மருது, சௌமியன், அரசு போக்குவரத்துக் கழக நாகை மண்டல பொதுமேலாளர் எஸ்.ராஜா, துணை மேலாளர்கள் சிதம்பரகுமார், ராமமூர்த்தி, கிளை மேலாளர் வடிவேல், கும்பகோணம் கோட்ட அரசு போக்குவரத்துக் கழக செய்தி மக்கள் தொடர்வு அலுவலர் க.பாண்டியன், மயிலாடுதுறை நகரக் கழக நிர்வாகி கள் வை.தெய்வநாயகம், ஆர்.கே.சங்கர், மலக்கோயில் பிரபாகர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி பள்ளிக்கல்வித்துறையால் மாணவ – மாணவியர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா மிதி வண்டியை, கொரடாச்சேரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் சாரு ஸ்ரீ, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றிய பெருந்தலைவர் உமா பிரியா, ஒன்றிய செயலாளர் ஆர். பாலச்சந்தர், பேரூர் கழகச் செயலாளர் பூண்டி. கே. கலைவேந்தன் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் ஆசிரியப் பெருமக்கள் உடன் இருந்தனர்.

### ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டம் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில்

# 3,278 கல்லூரி மாணவர்கள் மாதந்தோறும் ரூ.1000 பெற்றுப் பயனடைவர்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெருமிதம்!

பெரம்பலூர், ஆக. 15 -

பெரம்பலூர் மாவட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடி திட்டங்களை மக்களுக்காக செயல்படுத்தி வருபவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் -“தமிழ்ப்புதல்வன்“ திட்டத்தின் மூலமாக பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 32 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பயிலும் 3,278 மாணவர்கள் மாதந்தோறும் ரூ.1,000 பெற்று பயனடைய உள்ளனர் என போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

தமிழ்நாடு முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதிய திட்டமான ”தமிழ்ப் புதல்வன்” என்ற சிறப்பான திட்டத்தை கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் தொடங்கி வைத்தார்கள்.

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக்கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்ற தமிழ்ப் புதல்வன் திட்ட தொடக்க விழாவில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில், கல்லூரி மாணவர்களுடன் அமர்ந்து நேரலையில் பார்வையிட்டார். பின்னர் 430 மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பெருக்குவதிலும் குறிப்பாக இளைஞர்கள் உயர் கல்வி பெறும் வாய்ப்புகளை உயர்த்துவதிலும் மிகுந்த அக்கறை செலுத்தி திட்டங்களை வகுத்து வருகிறார்கள்.

அரசுப்பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்விக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் ”புதுமைப் பெண்” என்ற சிறப்பான திட்டத்தை 05.09.2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் 4,566 மாணவிகள் பயன்பெற்றுள்ளார்கள். இத்திட்டத்தால் உயர்கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இத்திட்டத்தை மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் விரிவுப்படுத்திட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில், அரசுப்பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை பயின்று, உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களுக்கு மாதம் ரூ,1000 வழங்கும் ”தமிழ்ப் புதல்வன்” திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று தமிழ்நாடு முழுவதும் தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் 3,278 மாணவர்கள் பயனடைய உள்ளனர். இந்த மாணவர்களுக்கு அவரவர் வங்கிக்கணக்கில் நேற்றே ரூ.1000 வரவுவைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது,

இத்திட்டம் கல்லூரி செல்லும் மாணவர்களின் உள்ளங்களில் தன்னம்பிக்கையை வளர்க்கிறது, கல்வி கற்கும் ஆர்வத்தைப் பெருக்குகிறது. பெற்றோரின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கிறது. உயர் கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துகிறது. தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை இந்திய அளவில் மேலும் உயர்த்துகிறது.

கல்விக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற உயரிய எண்ணத்தில் நம் முதலமைச்சர் இந்த திட்டத்தை செயல்படுத்தியுள்ளார். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முன்னோடியான மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகின்றார். மாணவச்செல்வங்கள் அரசின் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு நன்றாக படித்து வாழ்வில் உயர வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.



இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, இச்சிறப்பு திட்டத்தை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக மாணவர்கள் நன்றி தெரிவிக்கும் விதமாக, 1000 மாணவர்கள் ஒன்றிணைந்து ”தமிழ்ப்புதல்வன்” என்ற எழுத்து வடிவில் நின்றார்கள். அவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்ட தொடக்க விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை மற்றும் நிகழ்ச்சி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தின் வாயிலாக நேரலையில் ஒளிபரப்பப் பட்டது, இந்நிகழ்வையும் போக்குவரத்துத்துறை அமைச்சர் பார்வையிட்டார்கள்.

அதனைத்தொடர்ந்து, நிகழ்ச்சி நடைபெற்ற வளாகத்தில், அமைக்கப் பட்டிருந்த நடமாடும் பணம் எடுக்கும் இயந்திர வாகனத்தில் மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பற்று அட்டைகளைப் பயன்படுத்தி போக்குவரத்துத்துறை அமைச்சர் முன்னிலையில் மகிழ்ச்சியுடன் பணம் எடுத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல்பிரபு, சார் ஆட்சியர் சு.கோகுல், மாவட்ட சமூக நல அலுவலர் ஜெயஸ்ரீ, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மீனா அண்ணாத்துரை (பெரம்பலூர்), க.இராமலிங்கம் (வேப்பந்தட்டை), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), அனைத்து பேரூராட்சித்தலைவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பரத்குமார், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள், உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத் துறைகளின் அலுவலர்கள், வங்கியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கம்மராசபுரம் கே.எம்.இராஜகோபால்

### ஆகஸ்ட் 15 (1980)



தனது 16வது வயதிலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து, தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்று கழகத்தில் தீவிரமாக பணியாற்றி தமிழகமெங்கும் சுற்றி மூடநம்பிக்கை எதிர்ப்பு பிரச்சாரம் செய்தவர்.

அண்ணாவின் ‘நீதிதேவன் மயக்கம்’ நாடகத்தில் இராவணன் வேடமேற்று நடித்தவர்.

உழவர் குத்தகை உரிமை – இந்தி எதிர்ப்பு – சட்ட எரிப்பு – விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் களம் புகுந்து சிறை சென்றவர்.

1965ல் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் – 1976ல் மிசா சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் – கம்மராசபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக மறையும் வரை தொடர்ந்து பொறுப்பில் இருந்தவர்.

காஞ்சிபுரம் வட்டக் கிளைச் செயலாளர் – செங்கல்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் – தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**